# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.412/ 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 7 |
| Name | : டாக்டர். தேன்மொழி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025.

--------

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது உசிலம்பட்டி, தலைமை மருத்துமனையில் உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். நான் 30.08.2015ம் தேதியில் இரவு 7.30 மணியளவில் பணியில் இருக்கும்போது உசிலம்பட்டி, நகர் காவல் நிலைய மருத்துவ நமுனாவுடன் சிகிச்சைக்கு வந்த வாலாந்தூரை சேர்ந்த ஜெயக்கொடி மகன் பிரேம்குமார், வயது:33 என்பவர் தன்னை கம்பாலும், கையாலும் தெரியாத நான்கு நபர்கள் எழுமலை கிராமத்திலிருக்கும் ஈஸ்வரி கோயிலின் அருகில் 30.08.2015, பிற்பகல் 3.30 மணியளவில் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது அவருக்கு வெளிகாயங்கள் காணப்பட்டன. 1. சிராய்ப்பு காயம் இடது பக்க கையின் மேல் பகுதியில் இருந்தது மற்றொரு சிராய்ப்பு காயம் இடது காதின் முன்பக்கத்தில் இருந்தது மற்றும் தனக்கு வலி இருப்பதாக கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.2. என்னை உசிலம்பட்டி நகர் காவல் நிலைய போலீசார் விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம்பட்டவர் என்னிடம் இரவு 7.35 மணிக்கு தான் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். காயச்சான்றிதழில் 7.35 என்பது அடித்தல் திருத்தலுடன் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது 3.00 மணி என குறிக்கப்பட்டு 3.30 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு கண்ணத்திலேயோ, முதுகிலோ காயம் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். 1வது காயம் சொரசொரப்பான இடத்தில் விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு உண்டு. காயம்பட்டவருக்கு காதில் ஏற்பட்ட காயம் மரக்கிளைகள், குச்சிகள் மீது மோதியிருந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால
கையொப்பம் இடப்பட்டது.

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி